# நினைவுச்சுடர்





அமரர்

## திருச்செல்வம் கமலாதேவி

**1950 - 2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும்

வவுனியா, கோவில்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருச்செல்வம் கமலாதேவி

அவர்களின் சிவபதப் பேறு குறித்த

31ம் நாள்

## நினைவு மலர்

26.09.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# திருச்செல்வம் கமலாதேவி

மண் மகிழ : 10.07.1950 கண் நெகிழ : 27.08.2021

## திதி நிர்ணய வெண்பா

சார்வரி வருஷ ஆவணி மாத ஷஸ்டி திருதிகை
அச்சுவினி நட்சத்திர அமிர்த சித்த யோக நன்நாளில்
திருச்செல்வம் கமலாதேவி
இறைபதம் எய்திய நன்நாளாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## எங்கள் அன்பு தெய்வத்திற்கு
## சமர்ப்பணம்

குடும்பத்தின் குல விளக்காய்
ஆலவிருட்சம் போல் அழகு தந்து
நிழல் தந்து அன்பும் பாசமும்
சொரிந்து வாசம் குன்றா வாழ்வுதந்து
ஊர் போற்றும் அளவிற்கு
வாழ்வு தந்து தேசம் புகழும்
நிலை தந்து நாங்கள் வாழ வழி
அமைத்த எங்கள் ஆருயிர்
அம்மாவே எங்களுக்காகவே
ஓடி ஓடித் தேய்ந்து ஓய்ந்து
போன உங்கள் பாதங்களில்
கனத்த இதயத்துடன் ஈர முத்தமிட்டு
இன் நூலினை சமர்ப்பிக்கின்றோம்

-குடும்பத்தினர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## விநாயகர் துதி

வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே
அப்பம் முப்பழம் அமுது செய்தருளிய
தொப்பை அப்பனைத் தொழவினையறுமே.

## தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓர் ஊரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வம் நீயே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாயசிவபத மளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணிவிளக்கை
செற்றவர் புரங்கொள் செற்றைவெம் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளங்
குளிரவென் கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

இறவாத இன்பவன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே(ல்) உன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும்போதுன்னடியின் கீழிருக்கவென்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளையாடு முகம் ஒன்றே
ஈசனுடன் ஞான மொழி பேசு முகம் ஒன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகமானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திரு

# திருச்செல்வம் கமலாதேவி

அவர்களின்

வாழ்வுப் பயணிப்பு (1950 - 2021)

"நேற்றிருந்தார் இன்றில்லை எனும்
பெருமையுடைத்து இவ்வுலகு"

ஈழமணித்திருநாட்டின் எழில் கொஞ்சும் நகரான யாழ்ப்பாண மாநகரின் செந்தமிழும் சைவமும் தழைத்தோங்கும் ஊரான வட்டுக்கோட்டையில் குழந்தைவேலு நாகரட்ணம் அவர்களுக்கு புதல்வியாக 1950ம் ஆண்டு ஆடி மாதம் 10ம் திகதி இப்புவியில் வந்துதித்தார். இவரது அன்புச் சகோதரர்களாக அமரர் நடராசா, அமரர் பாலசிங்கம், நமசிவாயம் ஆகியோரின் அன்பு சகோதரி ஆவார்

இவ்வாறு வாழ்ந்து வருகின்ற போது தனது சிறு வயதிலேயே தாய் தந்தையை இழந்தமையால் தனது வாழ்விடத்தை கிளிநொச்சி, உருத்திரபுரம், 8ம் வாய்கால் என்னும் இடத்திற்கு மாற்றி அங்கு தனது கல்வி நடவடிக்கையை முடித்தார். இவர் சிறுவயதிலேயே துடிதுடிப்பும் அனைவரையும் நன்கு அனுசரித்து பழகும் குணத்தையும் கொண்டிருந்தார். தனது சகோதரர்களுள் மீதும் அவர்களது பிள்ளைகள் மீதும். அளவுகடந்த அன்பையும் அக்கறையும் கொண்டிருந்தார்.

இவ்வாறு நாளொரு மேனியும் பொருளொரு வண்ணமுமாக வளர்ந்து திருமணவயதை அடைந்த போது காங்கேசன்துறையை பிறப்பிடமாகக் கொண்ட இராசையா பொன்னம்மா அவர்களின் மகனான திருச்செல்வம் என்பரை 10.06.1976ம் ஆண்டு கரம்பிடித்து

இல்லறத்தில் இணைந்தார். அதன் பின் கிளிநொச்சியை வசிப்பிடமாக கொண்டு வாழ்ந்து வந்தனர். இவர்களது இல்வாழ்க்கையின் பயனாக கஜனி, சுபானி, சர்மினி என 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளை பெற்றெடுத்து நற்குணங்களுடன் வளர்த்து வந்தார். தன் பிள்ளைகளுக்கேற்ற மருமக்களையும் தேர்ந்தெடுத்து மணமுடித்து வைத்தார். மருமக்காளாக பத்மகுமார், சுபதீபன், ஜெனகன் ஆகியோரை இல்லறத்தில் இணைத்து வைத்தார். தன் விழுதுகளின் கிளைகளாக 7 பேரப்பிள்ளைகளான டினுஜன், கீதுஷா, டனுஜன், சாருஜன், விதுஜன், லவிஸ்னா, அபிஸ்னா ஆகியோரை பெற்று அனைவர் மீதும் அன்பையும் பாசத்தையும் பொழிந்து வந்தார்.

பாசமிகு கணவரின் சகோதரர்களான அமரர் நாகேஸ்வரி, அமரர் மகேஸ்வரி, பரமேஸ்வரி, தெய்வேந்திரம், மகேந்திரம் ஆகியோர் மீதும் அன்பாகவும் பாசமாகவும் பழகி வந்தார்

மைத்துணர், மைத்துணிமாராகிய அமரர் கந்தராசா, அமரர் பத்மநாதன், நடேசபிள்ளை, மல்லிகாதேவி, உருத்திராதேவி கமலாதேவியின் மைத்துணிமார் அமரர் ராசமணி, அஞ்சுகம் நிர்மலாதேவி அகியோர் மீதும் அன்பாகவும் பாசமாகவும் வாழ்ந்து வந்தார்

இவ்வாறு வாழ்ந்து வருகின்ற போது தனது வாழ்விடத்தை வவுனியா கோவில்குளம் மாற்றி அந்த ஊராருடனும் அயலவருடனும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு வாழ்க்கை பயணம் இனிதே சென்று கொண்டிருந்த போது வருகின்ற காலம் முழுவதும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், தொடக்கம் அனைவராலும் பாசாமாக அம்மா, மாமி, அம்மம்மா என்று அழைக்கப்பட்டு வந்த இவர் மாரடைப்பு நோய் காரணமாக 2021ம் ஆண்டு ஆவணி மாதம் 27ம் திகதி தனது 70 வது வயதில் இவ்வுலகை விட்டு பரமபதடைந்தார்.

பிறவில் பெருங்கடல் நீந்துவார்
நீந்தார்

இறைவனடி சேராதார்.

இங்ஙனம்

குடும்பத்தினர்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரை இழந்து வாடும்
## உடலான கண்ணாளன் கண்ணீரில்
## கவியான பாமாலை

முத்து மணிச்சரமே
முத்தான சித்திரமே
அணையா அகல் விளக்கே-என்
அக வாழ்வின் ஒழி விளக்கே
என்னில் கலந்தவளே
எனக்கென்றே பிறந்தவளே
என்னை தவிக்கவிட்டு-நீ
ஏன் முந்தி பறந்தாயோ,,,,,

மூன்று முத்துக்களை-என்
முகவரியாய் ஈன்றவளே
நால் பத்து ஆண்டுகள்
நாம் கூடி வாழ்ந்தோமே
சில பத்து நொடிகளில்
சிறகடித்து பிரிந்தாயே,,,,

நான் அற்ற பயணங்கள்
நீ போன தில்லையம்மா-இன்று
நாதியாய் எனை அழவைத்து
தனிமையில் நீமட்டும் போனதேனம்மா,,,,,

தாலி கட்டி தரமுயர்ந்த -எந்தன்
தாரமான தேவியரே
தரணியெலாம் எனை காத்த
அவதாரமும் நீயே
முந்தாநாள் நீ சிரித்தாயே
முழுமதியாய் ஒளி தந்தாயே
முத்தமிழில் சொல் கொடுத்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கனியில் உணவளித்தாயே
முத்தத்தமிட்டு முகம் மலர்ந்தாயே
உந்தன் மூச்சையின்று நிறுத்திவிட்டாய் தாயே

நீயில்லா உலகமிதில்
நான் வாழ வழியேது
நீ சமையா உண்டியதில்
நான் சுவைக்க சுவையேது
நீயின்றி நான் வாழும்
நரகமதை தந்து விட்டாய்
சுமங்கலியாய் போவதற்கோ
சுமை தந்து சென்றுவிட்டாய்
சொர்க்கமதை காண்பதற்கோ
சொந்தமெலாம் துறந்துவிட்டாய்

தென்றலதில் நீ கலந்து
தினம் வருடிவிட வந்திடம்மா
தேனுலகில் யான் வாழும் வரை
என்னுயிரோடு கலந்திடம்மா

கால் நூற்றாண்டுகள் -என்
கண்ணகியாய் வாழ்ந்ததற்கு
கவி வரியில் நன்றியம்மா

அன்பு கணவன்
திருச்செல்வம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மாவை இழந்து வாடும் முதல் மகளின் கவி புலம்பல்

முதல் மகளாய் ஈன்றெடுத்து
முலைப்பாலை ஊட்டி வைத்து
ஆடும் தொட்டிலதில் ஆட்டுவித்து
ஆராரோ பாடி எனையணைத்து
மண்டியிடா மானமதை ஊட்டுவித்து
தேனே திரவியமே தெம்மாங்கு பாட்டிசையே ,,,
தீம்புனலே தெம்மதுரை செந்தமிழே ,,செம்மலரே
செல்லமே ,,,,வெல்லமே
என்றெல்லாம் வாயார நீ பாடி
உன் முழு மடியில் தூங்க வைத்த தாயே
இன்று
கரு விழிகள் மூடி கடவுளரை தேடி
என் கையணையின் மடியதிலே
நிரந்தரமாய் தூங்கி விட்டாயம்மா

நேற்றுவரை,,,,
என் கண்ணில் நீர் வடிந்தால்
உன் கண்ணும் கலங்கிடுமே அம்மா,,,,
இன்று,,,,,
காட்டாற்று வெள்ளமதாய்
என் கண்ணீரும் ஓடுறதே,,,,
மூச்சற்ற உன் விழிகள்
என் முகம் பார்க்க மறுக்கிறதே ?அம்மா,,,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மை கலையா கண்மீது
மணி பதித்த சிற்பியென
சிங்கார விழி மூடி-என்
செல்லமே உறங்குகிறாய்
பேச்சடக்கி நீ படுத்தாயோ அம்மா,,,
பெரு மூச்சதையும் விட்டெறிந்தாயோ அம்மா,,,
என்னை உயிர் கொள்ள வைத்தவரே நீதானே,,,
நீயின்று உயிரற்று போனதென்னே நிஜம்தானோ,,,
அன்னயரே ஆன்ம வேருயிரே
எனை செப்பனிட்ட முதற்குருவே
என் சிந்தையெலாம் நிறைந்தவரே
என் செல்லமே என் செல்வமே
என் மலரே என் உறவே
என் உயிரே ,,, என் உயிரே,,,,
இன்னும் என்னவெலாம்
என் தாய்த்தமிழில் உள்ளனவோ
அத்தனையும் பாடி
கூச்சலிட்டு புலம்புகின்றேன்
உன் குஞ்சின் குரல் கேட்கலையோ அம்மா,,,
என்னை கொஞ்சிவிட தோன்றலையோ அம்மா,,,
முந்தாநாள் நீ சிரித்தாய் அம்மா,,,,
முழுமதியாய் ஒளி தந்தாய் அம்மா,,,
முத்தமிழில் சொல் கொடுத்தாய் அம்மா,,,,
முக்கனியில் உணவளித்தாய் அம்மா,,,
முத்தத்தமிட்டு முகம் மலர்ந்தாய் அம்மா,,,
உந்தன் மூச்சையின்று நிறுத்திவிட்டாயே அம்மா,,,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபிறவி உண்டென்றால்
மகேசனிடம் மன்றாடி கேட்கின்றேன்
மறுபடியும் மகளாகி-உந்தன்
மடிமீது தவழ்ந்திடவே,,,,,
தென்றலாய் நீ வந்து
என்னை தினம் வருடி சென்றிடம்மா,,,
என் ஆயுள் உள்ளவரை
என்னோடு நீயிருப்பாய் அம்மா,,,,
இன்றோடு எம் ஈருயிரும்
என் ஓருடலில் ஒன்றிடணும் அம்மா

ஓம் நம சிவாய

அம்மா நீ முக்குளித்து
வார்த்தெடுத்த முதல் முத்து
கஜனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மகளின் மனக்கலக்கம்

அன்பு வாழ்வினிலே
இரண்டாவதாக எனைப் பெற்று
முழு நிலவாய் வளர்த்தீர்கள்
நிறைவாய் நானிருந்தேன்.

ஊட்டி நிதம் வளர்த்த
உங்களை
உள்ளத்தால் தேடி
ஊமையாய் இருக்கின்றேன்.

உங்கள் நலன் பாராது
எமக்காய் நிதம் உழைத்து
கழித்த காலத்தை எண்ணுகிறேன்.
காலத்தின் வேகத்தில் கடுமையாய் சிக்குண்டோம்

அன்றென்ன இன்றென்ன
எமக்காய் வாழ்ந்தீர்கள்

கலைகள் பல கற்று
பார் போற்ற வேண்டுமென்று
சுபானி என்று நாமமிட்டு
வேண்டுவன உவந்தளித்து
குவலயத்தில் குன்றாக் கல்வி தந்தீர்

உண்ண உணவளித்து
சிறு நோய்க்கு மருந்தளித்து
நிதம் பேணிக் காத்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவாய் போனதம்மா
சுபானி இவளின் ஆசையம்மா!

இருவருமாய் இருந்து
கதைபேசி கச்சிதமாய்
கறிவைப்போம் ; சமைத்திடுவோம் ;
கதறுகின்றேன் காணவில்லை
உங்களை!

பக்கத்திலே முழு நேரம்
மிக்க கொடை என்று
மிதமாக நானிருப்பேன்
கண் திறந்து பின் திரும்ப
காலனவன் கண் பட்டதோ அம்மா!

உம் உயிரைக் காக்க என்று
ஒரு கடவுளையும் விடவில்லை
உரத்து ஓலமிட்டேன்
ஒரு பயனும் இல்லையம்மா!

அன்பு நெறி நின்ற
அம்மாவே!
ஆறுதல் தாரும் அம்மா.
அவனடி நீங்காது
நிலையாய் நீங்கள்
உறங்குங்கள் அம்மா!

அன்பு மகள்
சுபானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய் கிளியை தேடி வாடும்
## சேய் கிளியின் கவி மாலை

அம்மா அம்மா என் ஆன்மாவே
அழுதழுது அழைக்கின்றேன் வா தாயே,,,

ஆண் பிள்ளை நீயென்று அனுதினமும் சொல்வாயே
ஆறாத துயர் தந்து எனை விட்டு போனாயே,,,

இல்லறத்தில் இறுதியாய் எனை ஈன்றெடுத்தாயே
இதயமதில் இணைபிரியா இடமளித்தாயே,,,

ஈடிணையில்லா இயற்க்கையும் நீயே
ஈசனவன் எனக்களித்த உமையாளும் நீயே,,,

உயிர் வைத்து உருத்தந்த உமையவளும் நீயே
ஊர்போற்ற உயர்ந்திட்ட உத்தமியென் தாயே,,,

பத்து மாதம் சுமந்து
பாச மழை பொழிந்து
பக்குவமாய் ஈண்றெடுத்த தாயவளே,,,

கட்டி அணைத்து முத்தமளித்து
கரம் தாங்கி கண்மணியாய்-யான் வாழ
காசினியில் பேர்கொடுத்த தேவதையே,,,,

பட்டினி கிடந்தாலும்
பசியில் மெலிந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார் காணா துயரெல்லாம் -உனை
சூழ்ந்து கொண்டாலும்,,,,
தொட்டிலதில் எனையிட்டு
தொட்டுத்தழுவி தாலாட்டி - எனை
தூங்க வைக்க மறந்ததில்லை நீயே

குறும்புகள் நான் செய்கையிலே
பெருங்கோபம் கொண்டவளாய்
கிழை முறிப்பாய் - ஆனால்
சிறு கோடும் கீறாமல்
எனை அணைப்பாய் ,,,,,

அன்னையே அற்புதமே
அன்பின் விளைநிலமே
கருவறையில் எனை சுமந்த
கருணை பெருங்கடலே,,,,

மா'ரூட்டி எனை அணைத்து
முத்தமழை பொழிந்து
தேனே திரவியமே செல்லதிரவியப்பூமனே
என்றணைத்த உனை
காணாமல் தவிக்கின்றேன்
கண் விழித்து பாராயோ -கடைசி
முத்தம் தாராயோ,,,,

உன்னைக்கண் தேடுதம்மா-என்
உயிர்த்துடிப்பும் வாடுதம்மா,,,,,
பரமனடி சேர்ந்திடவோ
பறந்தோடி சென்றுவிட்டாய் ,,,,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறு பிறவி உண்டென்றால்
என் மகளாக பிறந்திடம்மா,,,,

என் மடிமேல் உனை வைத்தும்
என் மார்பணைத்து பால் தந்தும்,,,,
யான் பட்ட கடனெல்லாம் ,,,,
பக்குவமாய் செய்திடவும் ,,,
பறந்தோடி வந்திடம்மா,,,,
பாசமுடன் கொஞ்சிடம்மா,,,,

சிவனாரின் துணைகொண்டு
சொரக்கத்தை சேர்ந்திடம்மா
செங்கமல திருவடியில்
செழிப்பாக கலந்திடம்மா

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!

அன்பு மகள்
சர்மினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகனின் எண்ண அலைகள்

நீங்கள் எங்களுடன் வாழுவீர்கள் என்று
ஆசைப்பட்டோம் - ஆனால்
சொர்க்கம் உங்களை தேவை என ஆசைப்பட்டது
நீங்கள் உங்கள் நினைவுகளுடன் விட்டுவிட்டீர்கள்
நான் உங்களை நேசிக்கிறேன்
இன்னும் எவ்வளவு காலம் சென்றாலும்
நீங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவராகவே இருப்பீர்கள்
உங்கள் இதயத்தில் இரக்கமும்
நாங்கள் ஒன்றாக இருந்த அன்பு என்றும் மாறாது
நான் உங்களை திரும்ப அழைத்தாலும்
வர முடியாது என தெரியும்
நீங்கள் சென்ற நாள் எங்கள் வாழ்க்கை
நீங்கள் இல்லாமல் செல்கிறது - ஆனால்
நாங்கள் எங்கள் இதய வலியை மறைக்க வேண்டும்
யாராவது உங்கள் பெயரை பேசும் போது
சோகம்..... உங்களை நேசிக்கும் இதயங்கள்
அமைதியாயக் கண்ணீர் விடும்
நீங்கள் இல்லாமல் வாழ்வது
எல்லாவற்றிலும் கடினமான பகுதியாகும்
அனைவரும் கூடிய நாட்கள்
அந்த ஆண்டுகள் திரும்ப வராதா? - நாங்கள்
அனைவரும் ஒன்றாக இருப்பதற்கு
ஆனால் எங்கள் இதயத்தில் நீங்கள் எப்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுடன் நடப்பீர்கள்
நான் விடைபெறுகிறேன் என்று நீங்கள் ஒரு போதும் சொல்லவில்லை
நாங்கள் அதை அறிவதற்கு முன்பே
நீங்கள் கடந்து போய்விட்டீர்கள்
அதற்கான காரணம் கடவுளுக்கு மட்டுமே தெரியும்
ஒரு மில்லியன் முறை நான் அழுதேன்
அன்பு மட்டுமே உங்களை காப்பாற்றியிருந்தால்
நீங்கள் ஒருபோதும் இறந்திருக்க மாட்டீர்கள்.
நான் உங்களை இன்னும் நேசிக்கிறேன் - என் இதயத்தில்
நீங்கள் மட்டுமே நிரப்பக்கூடிய
ஒரு இடத்தை வைத்திருக்கிறேன்
நீங்கள் எனக்கு உலகத்தை அர்த்தப்படுத்தினீர்கள்
உங்களைப் போன்ற அன்பான ஒரு இதயம் மட்டுமே
என்று நான் உணர்கின்றேன்.

மருமகன்
பத்மகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னைக்கு அன்னையாய்!

உணவு தந்த கைகள் எங்கே?
உலா வந்த கால்கள் எங்கே?
நல்லது என்று வழி அனுப்பி
பாதி வழி வந்து பக்குவமாய் வழியனுப்பி
பதிலுக்கு காத்திருக்கும் பண்பான
உள்ளம் எங்கே?

அன்னைக்கு அன்னையாய் அரவணைத்த
அம்மாவைத் தேடுகிறேன்

நீங்காத நினைவாக நீங்கள் விதைத்த
பாசத்தை பகிரத்தான் முடியுமா?
பெற்றால் தான் தாயா? என்று
பெருமையைப் பெற்றுவிட்டீர்கள்

நன்றிப் பிரவாகம் பெருகிறது
நான் கடமை செய்ய நானிலத்தில் நீங்கள் இல்லை
என்றாலும்
உங்கள் அன்பு, அறிவு, தெளிவை
உள்ளத்தால் உணருகிறேன்.

உடல் அழியும் உயிர் அழியாது என்று உணர்ந்து
நிஜத்தை எண்ணி நிதானித்து நிற்கின்றேன்.
ஆடும் அம்பலத்தான் அவன் தாழில்
நீங்கள் நிறைந்திருக்க வேண்டுமென
நிதம் வேண்டுகிறேன் உங்களுக்காய்.

மருமகன்
சுபதீபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம் வாடி வடிக்கின்றேன்
## மாமிக்கோர் பா மாலை

அன்னையாய் ஆதரித்த ஆருயிர் மாமியரே
ஆண்டவன் கட்டளையில் நீ தூங்கி போனீரே
செந்தாளம் பூமுகத்தில் எந்நேர புன்னகையும்
செந்தமிழால் வார்த்தைகளை சீராக தந்தவளே
கண் நீரில் எமை ஆழ்த்தி கந்தனிடம் போனாயோ

காசினியில் யான் கண்ட
கனிவான இதயமொன்று
கடவுளரை தேடி அது
கண் மூடி போனதின்று,,,,

மாமி வடிவந்த மாதாயே-நின்
மக்காளை விட்டெறிந்து போனதென்னே
தாயாய் நீயிருந்து தயவுடனே பணிசெய்து
சீராய் எமை காத்த தேவியரே
செய்ய வந்த பணியெல்லாம்
சீராய் முடிந்ததென்றோ
பரமனடி நீ தேடி பாடையேறி சென்றாயோ

கூற்றவனுக்கென்ன
குணக்கேடோ யாநறியேன்
கூடு கட்டி -எமை
வாழவைத்த தாய்கிழியை
கூட்டி நமன் சென்றானே ,,,ஏனறியேன்

அம்மம்மா எங்கே என்றெனை கேட்கும்-உன்
ஆருயிர் பேத்தியற்கும்
என்னுரைப்பேன் சொல் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் செந்நீரில் உருவான
செல்ல மகள் சர்மிக்கு
கண்ணீரை பரிசாக்கி காலனுடன் சேன்றாயே

அனுதினமும் தொலைத்தடர்பில்
அழைத்து எமை பார்ப்பாயே-எமை
அரவணைக்க யாருமின்றி
அநாதையாக்கி சென்றாயே,,,,,

மறுபிறவி உண்டென்றான்றால்
மறுபடியும் என் மாமியாகி பிறந்திடம்மா
மகேசனவன் காலடியில்
மண்டியிட்டு வேண்டுகின்றேன்-என்
மா தாயை அரவணைத்து
சொர்க்கமதில் சேர்த்திடவே

அம்மா அம்மா சாந்தி அடையட்டும்
உன் ஆன்மா

நின் மனதில் மகனாகி வாழ்ந்த
மருமகன் ஜனாவின்
கவிப்புலம்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகளின் புலம்பல் பா

அத்தை அத்தையென்று
ஓடி நான் வருகையிலே
மெத்தையாய் மடி தந்து
மென்மையாய் கொஞ்சிடுவாய்

பெற்ற உன் பிள்ளையை போல்
நீ சசி என்றழைக்கையிலே
என் பசியெல்லாம் பறந்து விடும்,,,,

எனக்கின்னல் வருகையிலே
இரும்புக்கரம் நீ தந்தாய்
என் இன்பம் நீ காண்கையிலே
உன்னதுவாய் பூரிப்பாய்,,,,

அத்தை முறை என்றாலும்-என்னை
அரவணைக்கும் நீயென் தாயென்பேன்,,,
ஆயிரம் சொந்தங்கள் கொண்டாலும்
அதிலும் நீதானே முதலென்பேன்,,,,

கிளிநொச்சி நீ வந்து
சிலகாலம் ஓய்வெடுக்க நினைத்தாயே
இன்று சிவன் பாதம் நீ தேடி
நிரந்தர ஓய்வெடுக்க சென்றாயோ,,,

அத்தையே அன்னையே ஆருயிர் மாமியே
புன்னகை மலரே பொறுமையின் தேவியே
மீளாத்துயரில் என்னை விட்டெறிந்து
மீளாத்துயிலில் நீ போனாயோ
ஆறா றணம் தந்த அத்தையுன் ஆன்மா
ஆண்டவன் அடியில் அமைதியடையட்டும்

மருமகள்
சசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகனின் இரங்கற்பா

புன்னகை பூத்த முகம்
புறம் பேசா நல்லிதயம்
புனிதத்தால் உயர்ந்த குணம்
அன்னையாய் ஆதரிக்கும்
அரிதான பேருள்ளம்
அமைதியின் மறு வடிவம்
நிரந்தர அமைதியாய் போனதன்றோ

இரக்கமற்ற அரக்கர்களில்
இயமனவனும் ஒருவனென்பேன்
இனிமையான தாயவளை
பறித்தெடுத்து சென்றதனால்,,,,

அன்னையரின் பிள்ளையர்க்கும்
பிள்ளையரின் தந்தையர்க்கும்
ஆழ்ந்த இரங்கலதை நவில்கின்றேன்,,,

தாயாரின் ஆன்மாவும்
தயவுடனே சாந்தி பெற
தமிழ் கடவுள் கந்தனிடம்
தலை தாழ்த்தி வேண்டுகின்றேன்,,,,,

மருமகன்
சோதீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# To My Dearest Ammamma

I was filled with sadness when I heard about my Ammamma's passing. I know just how much everyone loved her, and just how special the relationship I had with her was. I pray that love and peace surround everyone during this challenging period.

The kind of love Ammamma felt for me was a love without condition. She may not have approved of everything I did, may not have liked some of the decisions I made, but she didn't lecture, she didn't judge. She just kept loving me for who I was, letting me know that she was there and if I ever needed her, I could count on her to listen, to comfort, to help.
She lived a simple life. It didn't take much to make her happy—a phone call or a visit to Sri Lanka was good enough for her. She lived to make our lives better and was proud of us.

To think that someone like her felt that way about us should make us all feel more than just a little good. I can never forget that there is a part of her in my sister and I, something that she gave to us and asked nothing for in return.

So, for your wisdom, your humour and your understanding, your patience and your love; thank you, Ammamma. After you, Ammamma, the mold was indeed broken.

With Love Your Grandson
Dinujan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# To My Dearest Ammamma

Recently, I just lost my beloved Ammamma who passed away on 27/08/2021. She was one special lady and the loss of her is felt deeply by many, even though she lived a full life. The love of a Ammamma is unique. God must have given Ammamma to me to liven up my life, to make my life more complete, to make me well rounded and better human beings. She played an important and I can remember so many times such as, sitting in her kitchen and tasting the dishes, she prepare with special love. She taught me a lot about love and the meaning of family... The main reason why I travel to Sri lanka quite often is so I can meet her and spend time with her. Now I have no one to visit..

I will miss you Ammamma. You also live in me and all those have been touched by the love, strength, conviction, wisdom, and beauty of her soul.

Love you Ammamma – You truly were a special, special woman! You may have passed on, but your memories would always live within me. Thank you for your sacrifices, your care and concern, your love and everything that you have done for me.

Rest in Peace Ammamma… We will never forget you and
We will always love you forever…

With Love Your Sweetest Granddaughter,

Hithusha



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மம்மாவை இழந்து பாடும் முழுப்பேரனின் தமிழ் பா

அம்மாவை பெற்றெடுத்த ஆன்மாவே
நின் அரவணைப்பில் எனை
வளத்தெடுத்த அம்மம்மாவே,,,,

காலெடுத்து நடைபயில கை தந்தாய்
நாவதிலே தமிழ் பேச சொல் தந்தாய்
நற் பழக்கம் ஊட்டி எனை நீ வடித்தாய்
நான் உழைத்து உனை தாங்குமுன்னே
நீ எதற்காய் பறந்து விட்டாய்,,,,

ஆண் பிள்ளை இல்லை என்றோ
என்னை உன் அரும்மடியில் வளர்தெடுத்தாய்,,,

யான் ஆளாகி உனை காக்குமுன்னே
உனக்காய் கொள்ளியிடும்
கொடுமையதை கொடுத்துவிட்டாய்,,,

அம்மம்மா நின் முழுமனதும்
நிறைந்திருந்த முதற் பேரன்
நானென்றோ
முழு கடமையதை செய்வித்தாய்,,,,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புட்டியதில் பால் தந்த உன்னை
பெட்டியதில் பூட்டி விட்டேன்,,,,
வாய்க்கரிசி இட்டேனே
என்னை வாழ்த்தி வந்த வாயதினில்,,,,,,
தீ பிளம்பால் சுட்டேனே
என்னை தினம் அணைத்த மேனியதில்,,,

அம்மம்மா உங்கள் ஆன்மா
சாந்தி பெற
உங்கள் அரும்பேரன் வேண்டுகின்றேன்,,,
சொர்க்கமதில் குடியேறி
சுகமாக வாழ்ந்திடுங்கள்,,,,

அம்மம்மாவின்
அகம் நிறைந்த முழுப்பேரன்
டனுஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்ப்பேரனின் உயிர்ப்பில்
## பூத்த கவிப்பூ

அம்மம்மா
உன் கைப்பிடியில் தவழ்ந்த
குட்டிப்பேரன் வாடுகின்றேன்
என்னை விட்டெறிந்து எங்கே
நீ சென்று விட்டாய்,,,,

நீயின்றி என் நித்திரைக்கு
யார் வருவார் துணையாக???
என் தேவையதும் தீர்துவிட
எவர் வருவார் உனக்காக???
தாயின் கையணையில்
நான் தூங்கி அறிந்ததில்லை,,,
என் தாயின் தாயே
உன் கையணைதான் என் தலையணையே நீயதனை
அறியாயோ???

அம்மம்மா
நான் பார்க்குமிடமெல்லாம்
நீதானே நீர்க்கமற நிற்கின்றாய்,,,
என் நினைவலையில்
நீதானே நிரந்தரமாய் பூக்கின்றாய்,,,,

அம்மம்மா
என்னை துணைகூட்டி போயிருந்தால்
எமனவனை கொன்றிருப்பேன்,,,,
இல்லை,,,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுயிரை காப்பதற்காய்
என்னுயிரை கொடுத்திருப்பேன்,,,,

அம்மம்மா,,, என்றழைக்க
யாருமில்லா அழுது வாடும்
உன் பேரன் குரல் கேட்கலையோ,,,,

எனக்கு
ஆசை முத்தம் கொடுப்பதற்கும்
என்
அழுத கண்ணீர் துடைப்பதற்கும்
என்ர
அம்மம்மா இல்லை இன்று,,,,

என் ஆயுள் உள்ளவரை
என்னோடு நீயிருப்பாய் நிழலாக,,,
உன் ஆத்ம சாந்திக்காய்
தினமும் யான் வணங்கிடுவேன் சிவனாரை,,,

உன்னுயிர்ப்பேரன்
விஜஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்மம்மாவை எழுப்பாதீர்**
**அவர் அப்படியே தூங்கட்டும்**
**நாம் வந்து எழுப்பும்வரை**

அம்மம்மா
ஆழ துயிலில் எமை மறந்து போனாயோ
அப்பாவை கேட்டால் நித்திரை என்கின்றார்
அம்மாவோ அழுகுரலில் ஆண்டவனை
தேடுதற்காய் துயில்வதாய் சொல்கின்றார்,,,

உண்மையறியா உங்கள் குஞ்சுகள் நாம்
உங்கள் குரல் கேட்க துடிக்கின்றோம்
ஒருதடவை பேசிவிட்டு
மறுபடியும் உறங்குங்களேன்,,,,,,

அனுதினமும் அழைப்பெடுத்து
ஆசை வார்த்தை சொல்வாயே,,,,

தேனே திரவியமே தெகிட்டாத வெண்பாகே
பாற்கனியே அமுதே அழகே
ஆருயிர் குஞ்சுகளே என்றெல்லாம்
அரவணைத்த பாசக்குரல் -எம்மோடு
பேசாமல் தூங்குகின்ற மாயமென்னே,,,,

ஆழ்துயிலில் நீ போனால்-எமை
அரவணைக்க யாருண்டு,,,,
உங்கள் நெஞ்சதிலே தூங்கிய
இந்த குஞ்சுகளை விட்டுவிட்டு
நீ மட்டும் தனியாகதூங்குகிறாய்,,,,,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மம்மா
எழு பத்து ஆண்டுகளாய்
உழைத்து வந்த கால்களிற்கு
ஓய்வளிக்கும் தூக்கமிதோ,,,,

அம்மம்மா
எம்மை தூக்கி வளர்த்து
 சோர்ந்த கரங்களிற்கு
சுகமளிக்கும் தூக்கமிதோ,,,,
உங்கள் குஞ்சுகள் நாம் கெஞ்சுகின்றோம்
பஞ்சணையில் படுத்துறங்கும்
வஞ்சகத்தை விட்டெறிந்து
உங்கள் பிஞ்சுகளை கொஞ்சுங்களேன்,,,,

அம்மம்மா
இழைப்பாறும் உங்கள் தூக்கத்தை
இனிமேல் நாம் குழப்பிவிடோம்
நன்றாக தூங்குங்கள்
நாம் இனிமேல் இடைஞ்சல் தரோம்
பள்ளி விடுமுறையில் -நாம்
பறந்தோடி வரும்வரைக்கும்
பஞ்சணையில் தூங்குங்கள்
நாம் வந்தும்மை எழுப்பும் வரை

இப்படிக்கு
ஆம்மாம்மாவின் பேரக்குஞ்சுகள்
லவியும் அபியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளை பெருந்துயர்

அம்மம்மா அம்மம்மா
ஆசை அழகம்மா
சொப்பணம் போலே
எங்களுடன் சிலகாலம்தானே
சிரித்து இருந்தீர்கள்
சிலகாலம் இருந்தாலும்
சீரோடு எமை வளத்தீர்கள்
பலகாலம் உங்களுடன்
பாசமாய் வாழ்வதற்கு
பார்படைத்த இறைவன்
இரக்கம் காட்டவில்லை
நாங்கள் விளையாட
நீங்கள் பொருள் தந்தீர்
எங்களுக்கென்றே எத்தனை
உணவு வகை
நித்தமும் தந்து
நிறைவடையச் செய்வீர்கள்
அத்தனை சுகமும்
இனி எப்போ எங்களுக்கு
நீங்கள் சென்றதால்
நிலை குலைந்து நிற்கின்றோம்
உங்கள் வரவுக்காய்
ஒவ்வொரு நாளும் துதிக்கிறோம்.

அன்புப் பேரப்பிள்ளை
சாருஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்



சீதக்களபச்செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக் கோடும்
வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
ஐந்து கரமும் அங்குசபாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மதச்சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியுந்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதநின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூஷிக வாஹன
இப்பொழுதென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவா
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந்தன்னில்
திருவடி வைத்துத்திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந் தெக்கருளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடாயுதத்தாற் கொடுவினைகளைந்தே
உவட்டாவுபதேம் புகட்டியென் செவியில்
ஐம்புலன்றன்னை டக்குமுபாயம்
இன்புறு கருணை இனிதெனக்கருளி
கருவிகளொடுங்கும் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை அறுத்திருள் கடித்து
தலமொரு நான்குந்தந் தெனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரையறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்து
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான் றெழுபாம்பி னாவிலுணர்த்தி
குண்டலியதனிற் கூடியபியவசைபை
விண்டொழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தனியக்கமும்
குமுதசகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்ஷமமும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்முகமாக இனிதெனக்கருளி
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் காபல வாயிற் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக்களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்து
இருவெளியிரண்டும் கொன்றிட மென்ன
அருளருமானந்தத் தழுத்தி யென் செவியில்
எல்லையில்லா ஆனந்தமளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கங்காட்டி
அணு விற்கணு வாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமுநீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும் பொருள்தன்னை
நெஞ்சக் கருத்திலன் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசக மென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமனிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசனடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற வதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லாஅ நின்றவித் தாவர சங்மத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியோனே
மாற்ற மனங்கழிய நின்ற மறையானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை

மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலங்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிகாப்பு



*விநாயகர் துதி*

*முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு*
*என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்*
*சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோஉவு தரும்*
*எக்குற்றமும் வாராமற்கா.*

வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகி'ாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழ விடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்மைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

*திருச்சிற்றம்பலம்*

போற்றி ஓம் கௌரி போற்றி போற்றி என்றகத்திலன்பு
சாற்றினில் ஊறி நிற்கும் தன்னடியார்கள் தம்மை
கூற்றின் நெடியாசற் கொடுமைகள் லனுகாவிட்டால்
ஏற்றி எங் கருட்பாலூட்டும் இறைவியே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்தசஷ்டி கவசம்

## காப்பு



**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

**குறள் வெண்பா**

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

**நிலைமண்டல ஆசிரியப்பா**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுக் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டிற் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரர ரரர
ரிஹண பவச ரிரிரி ரிரிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாருளும்ளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரெண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெற்றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறு றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடர்ரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோதனென்று
நுன் திருவடியை உறுதியென்றெண்ணும்
என்றவை வைத்துள் இணை யாகாக்க
என்னுயிர்க்குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காகக்
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேலிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வையிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்கக் காக்கக் கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பரவசம் பொடி பட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புகழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஓட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தர்களெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷயங்கள் எளிதினில் லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக் கருள்வாய்
ஈரஏழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலைஉறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரரா குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீக்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக ள்நீங்க
எத்தனை குறைகள்எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தாங் கருளுவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலா வல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான் பித்
தாகவுண்டார்க்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே
சகல கலா வல்லியே

நாடும் பொருற் சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே
கனதனக் குன்றுமைம் பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலா வல்லியே

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறை தோய்த்த
கல்வியுஞ் சொற் சுவை தோய்
வாக்கும் பெருக பணித் தருள்
வாய் வட நாற் கடலும்
தேர்க்குஞ் செந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலா வல்லியே

பஞ்சப் பிதத்தரு செய்ய பொற்
பாதபங் கேரு கமென்
நெஞ்சத் தடத்தல ராத தென்
னேநெடுந் தாட் கமலத்து
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவும் அகவும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலா வல்லியே
பண்ணும் பரதமும் கல்வியு
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலா வல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலா வல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தக் கடிமை கொள்
வாய் நளினாசனஞ் சேர்
செல்வக்கரி தென் றொரு கால
முன்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலா வல்லியே

சொற்கும் பொருட்டு முயிரா மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலா வல்லியே

மண்கண்ட வெண்குடை கீழாக
மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுன்
டேனும் விளம்பினுள் போற்
கண்கண்ட தெய்வமுள தோ
சகல கலா வல்லியே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லிங்காஷ்டகம்

ப்ரஹ்ம முராரி ஸிரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துர்க்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவமுனி ப்ரவராச்சித லிங்கம்
காமாஹும் கருணாகர லிங்கம்
ராவய தர்ப்ப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வ ஸீகந்தி ஸீலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸீராஸீர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

கனக மஹாம பூசித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தஷ ஸீயகஞ் விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸீசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவைர் பக்திபி ரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸாவ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸீரகுரு ஸீரவர பூஜித லிங்கம்
ஸீரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பராத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

(ஸ்ரீமத் சங்கர பகவத்பாத சுவாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்று
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்தி கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள்சுமந்து
அந்தி பகலாய்ச் சிவனை ஆதரித்துச் - தொந்தி
சரியாய்ச் சுமந்து பெற்ற தாய் தமக்கே
எரியத் தழல் மூட்டுவேன்

வட்டலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னை காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றி சீராட்டும் தாய்க்கே
விறகிட்டுத் தீ மூட்டுவேன்

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்தி முலை
தந்து வளர்த் தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையில் கொண்டென்னை காப்பாற்றும் தாய்
தனக்கோ மெய்யிலே தீ மூட்டுவேன்.

அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருகியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியம்பூ
மானே என அழைத்த வாய்க்கு

அள்ளி இடுவது அரிசியோ தாய் தலைமேல்
கொள்ளி தனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி என்தன்
மகனே என அழைத்த வாய்க்கு

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூழ்க மூழ்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுமே பாவியேன் ஐயகோ - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம் கிடந்து என்
தன்னையே ஈந்தெடுத்த தாய்

வீற்றிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்று வெந்து நீறானாள் பால் தெளிக்க
எல்லாரும் வாருங்கள் ஏதென்றிரங்காமல்
எல்லாம் சிவமயமேயாம்

பிறக்கும் போது கொண்டு வந்ததில்லை
பிறந்து மண்மேல் இறக்கும் போது கொண்டு போவதில்லை
இடைநடுவில் குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்ததென்று
-கொடுக்கரிய
திரக்குங் லாமருக்கென் சொல்லுவேன் கச்சியேகம்பனே.

ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற
பேரும் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்
சீரும் சதமல்ல செல்வம் சதமல்ல தேசத்திலே
யாரும் சதமல்ல நின்றார் சதம் கச்சி ஏகம்பனே

முடிசார்ந்த மன்னரு முற்றும் உள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதும் கண்டு பின்னும்மிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னினம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே அறிவாரில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க சில வரிகள்

- பிறர் செய்வதில் எது உனக்கு பிடிக்கவில்லையோ அதை நீ மற்றவர்களுக்கு செய்யாதே.

- நல்லதையோ தீயதையோ எதையொருவன் செய்தாலும் அதன் விளைவுகள் அவனைத் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

- பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது பணம் இருந்தால் உன்னையே உனக்குத் தெரியாது.

- நீ சந்தோசமாக இருக்கும் போது வாக்குறுதிகளை கொடுக்காதே. நீ கவலையோடு இருக்கும் போது கடிதங்கள் எழுதாதே.

- தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடம் இருந்து வெற்றி தானகவே ஒதுங்கி கொள்கின்றது.

- சோம்பலின் விளைவு வறுமை முயற்சியின் விளைவு மூலதனம்.

- நெற்றியை காயப்படுத்துவதை விட முதுகை வளைத்து செல்வ நல்லது.

- விழுவது வெட்கமல்ல விழுந்து கிடப்பதே வெட்கனமானது.

- அறிவு இல்லாத கண்ணியம் பலவீனமானது பயனற்றது ஆனால் கண்ணியம் இல்லாத அறிவு ஆபத்தானது அஞ்சத்தது.

- நல்ல அறிவு எந்த மூலையில் எவ்வளவு தூரத்தில் இருந்த போதிலும் அதை தேடிச் செல்லு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Eightrules Fora happy Marriage

மகிழ்ச்சியான மணவாழ்க்கைக்கு எட்டு விதிகள்

- ஒரே சந்தர்ப்பத்தில் இருவரும் கோபமடையாதீர்கள்
  Never both get angry at the same time

- உங்கள் வீடு தீப்பற்றி எரிந்தாலன்றி ஒருவரோடு ஒருவர் பெருஞ் சத்திமிட்டு கத்தாதீர்கள்
  Never yell at each other unless the house is on fire

- தர்க்கத்தினால் வெற்றியடைபவர் எப்போதும் உங்கள் வாழ்க்கைத் துணைவராகவே இருக்கட்டும்
  If one of you has to win an argument let it be your life's partner

- கண்டிக்கும் போது, குறைகளை கூறும்போது அதை அன்புடன் மனம் புண்படாமல் எடுத்துச் சொல்லுங்கள்
  If you have to criticize, do it lovigly

- ஒரு தர்க்கத்தில் ஈடுபட்டு அத்தர்க்கத்தில் உடன்படிக்கை ஏற்படாமல் நித்திரைக்கு செல்லாதீர்கள்
  Never go to sleep with an argument unsettled
- ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது உங்கள் துணைவரைப் புகழ்ந்து ஒரு வார்த்தையாவது கூறுங்கள்
  At least once every day try to say one kind thing to your life's partner

- நீங்கள் ஏதாவது தவறுகள், பிழைகள் செய்திருந்தால் அவற்றை ஏற்றுக்கொண்டு மன்னிப்பு கோருங்கள்
  Whene you have done samething wrong, be ready to admit and ask for forgiveness

- கடந்தகால விடயங்களை, சம்பவங்களை மறந்து விடுங்கள்
  Forget the past incidents



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசர தொலைபேசி இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| * | அவசர பொலீஸ் பிரிவு | - 119 |
| * | அவசர அதிவேகப் பிரிவு | - 1968 |
| * | சுற்றாடல் மாசடைதல் தொடர்பாக | - 1991 |
| * | அவசர தகவல் பாதுகாப்பு திணைக்களம் | - 1919 |
| * | நீர் வடிகால் அமைப்புச் சபை | - 1939 |
| * | போதைப் பொருள் சார்ந்த பிரச்சினை | - 1984 |
| * | குடிவரவு மற்றும் குடியகல்வு | - 1962 |
| * | மொழிகள் சார் பிரச்சினைகள் | - 1956 |
| * | கல்வி அமைச்சு | - 1988 |
| * | தீயணைப்புப் பிரிவு மற்றும் அம்புலன்ஸ் | - 110 |
| * | போக்குவரத்து தொடர்பான உரிமை | - 1955 |
| * | பழுதான உணவை விற்பனை செய்தல் | - 1977 |
| * | இயற்கை அனர்த்தம் | - 117 |
| * | சிறுவர் துஷ்பிரயோகம் | - 1929 |
| * | பரீட்சைத்திணைக்களம் | - 1911 |
| * | உயர்கல்வி அமைச்சு | - 1918 |
| * | தேசிய உதவி மையம் | - 118 |
| * | தேசிய வைத்தியசாலை | - 1959 |
| * | விவசாயிகளுக்கான சேவைகள் | - 1918 |
| * | குண்டு வெடிப்பு செயலிழப்பு பிரிவு | - 0112437515 |
| * | குற்றத் தடுப்புப் பிரிவு | - 01126915 |
| * | பொலீஸ் தலமையகம் | - 0112421111 |
| * | மின்சாரத்தடை | - 0112466660 |
| * | அவசர சுற்றுலாத்துறை பொலீஸ் | - 0112421052 |
| * | செஞ்சிலுவை | - 0112672727 |
| * | விபத்துப்பிரிவு | - 0112693184 |
| * | உளநலம் சார் பிரச்சினைகள் | - 0212226666 |
| * | சட்ட உதவி ஆணைக்குழு | - 0212224545, |
| | | - 0112433618 |
| * | சென் ஜோன்ஸ் அம்புலனஸ் சேவை | - 0112437744 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மோசடி பணியகம் - 0112583512
* SLRC (வாகனம்) - 0242241773

## சில முக்கிய தொலைபேசி இலக்கங்கள்

* வவுனியா தபாற்கந்தோர் - 024-2222254
* வவுனியா மின்சார சபை - 024-2222285, - 2222379
* வவுனியா புகையிரத நிலையம் - 024-2222271
* வவுனியா ரெலிகொம்(Customer Office), (வாடிக்கையாளர்) - 024-2222540
* வவுனியா பொலீஸ் நிலையம் - 024-2222222
* வவுனியா C.T.B. (வடமாகாணம்) - 024-2222181
* வவுனியா பிரதேச செயலகம் - 024-2222237
* வவுனியா தெற்கு செயலகம் - 024-2222202
* வவுனியா வடக்கு செயலகம் - 0242222994
* வவுனியா வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகம் - 0242220905
* வவுனியா பொது நூலகம் - 0242222276
* உதயன் பத்திரிகை - 0212222030
* தினக்குரல் - 0212222127
* வலம்புரி - 0212223378
* வீரகேசரி - 0212222730

## வங்கிகள்

* மக்கள் வங்கி - 024-2222378
* இலங்கை வங்கி - 024-2221221
* கொமர்சல் வங்கி - 024-2220655
* சம்பத் வங்கி - 024-2222950
* NSB - 024-2222588



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் வீட்டில் நீள அகல பலன்

06 அடி - நன்மை

07 அடி - மத்திமம்

08 அடி - இராச்சியம்

09 அடி - கேடு

10 அடி - பாக்கியம்

11 அடி - புத்திரலாபம்

12 அடி - பிள்ளையின்மை

13 அடி - மரணம்

14 அடி - பகை

15 அடி - துன்பம்

16 அடி - செல்வம்

17 அடி - நாளுக்கு நாள் ஆக்கம்

18 அடி - நஷ்டம்

19 அடி - புத்திரர் கவலை

20 அடி - இனம் சேரும்

21 அடி - ஆடு மாடு இறக்கும்

22 அடி - சோபனம் உண்டு

23 அடி - பிணி

24 அடி - மனைவி மரணம்

25 அடி - செல்வப்பேறு

26 அடி - பகை

27 அடி - அரசாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28 அடி - ஆயுள் விருத்தி

29 அடி - சுற்றப்பெருக்கு

30 அடி - நோய்

31 அடி - தரித்திரம்

32 அடி - இழந்த பொருள் வரும்

33 அடி - இரு மனைவியர்

34 அடி - குடிகேடு

35 அடி - ஜீவன விருத்தி

36 அடி - சுகமுடமை

37 அடி - பசுவிருத்தி

38 அடி - நினைத்தது கெடுதி

39 அடி - இராச சன்மானம்

40 அடி - மனைவி நாசம்

41 அடி - பாக்கியம்

42 அடி - கீர்த்தி

43 அடி - இராச தண்டம்

44 அடி - அங்கவீனம்

45 அடி - சற்புத்திரர்

46 அடி - பிசாசு வாசம்

47 அடி - சூனியப்பீடை

48 அடி - தீயினால் கேடு

49 அடி - மலடாவான்

50 அடி - சர்வாதிகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



"எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் -
உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

எங்கள் குடும்பத் தலைவி திருச்செல்வம் கமலாதேவி அவர்களின் மரணச் செய்தி கேட்டு உடன்வந்து ஒத்தாசை உதவிகள் செய்தோருக்கும், மரணச்சடங்கில் கலந்து கொண்டோருக்கும், உள்நாடு வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகள் அறிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிகள், பதாதைகள் மூலம் அனுதாபங்களை வெளிப்படுத்தியோருக்கும் மற்றும் அந்தியேட்டி சபிண்டிகரண கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் கிரியைகளைச் செய்த குருமாருக்கும் இம்மலரை அழகுடன் அச்சிட்டு தந்த சபரி அச்சகத்தினருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.



இங்ஙனம்,
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

*குழந்தைவேலு + *நாகரட்ணம்

கமலாதேவி
* நடராசா
* பாலசிங்கம்
நமசிவாயம்

*இராசையா + *பொன்னம்மா

திருச்செல்வம்
* நாகேஸ்வரி
* மகேஸ்வரி
தெய்வேந்திரம்
மகேந்திரம்

திருச்செல்வம் + கமலாதேவி

கஜனி + பத்மகுமார்
டினுஜன்
கீதுஷா

சுபானி + சுபதீபன்
டனுஜன்
சாருஜன்
விதுஜன்

சர்மினி + ஜெனகன்
லவிஸ்னா
அபிஸ்னா

* இக் குறியீடு அமரர்களைக்குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையது எதை நீ இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே எடுக்கப்பட்டது,
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது,
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது,
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்

□இந்தமாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்.□
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

sabari printers
077 838 0270

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org